
டாக்டர் சரசுவதி இராமநாதன்

இயற்றிய

# ஸ்ரீ ஐயப்பன் திருப்புகழ்



**திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்**

2, லாசன்ஸ் ரோடு, திருச்சிராப்பள்ளி-620 001.

✆ 0431 - 2461415

₹ 10/-

**ராகம் : நாட்டை** மெட்டு : **சந்ததம் பந்தத் தொடராலே**

1. சன்னதி தேடி வருவோர்கள்
சங்கடம் தீர்க்கும் மணிகண்டா
சந்ததி வேண்டித் தொழுவோர்க்கு
சகலமும் அருளும் குருநாதா !

கந்தனின் தம்பியாம் சபரீசா
கலியுக வரதனாம் மலைவாசா
உன்னிரு சரணமே துதிப்போர்க்கு
உயர்வுகள் காட்டும் பெருமானே!

❊ ❊ ❊

ராகம் : **மலையமாருதம்** மெட்டு : **நிறைமதி முகம்**

2. நிறைமதி ஒளி உமிழ் முகத்தோனே
நிலை என சபரியில் அமர்ந்தோனே
உறவுகள் ஒண்பொருள் சதமாமோ!
உனதிரு அடிமலர் அருள்வாயே!

மறை பயில் அரி அரன் சுதனானாய்
மகிஷியின் மமதையை அழித்தோனே
குறைபல இருப்பினும் சரணம் என்றால்
குறையிலா வாழ்வருள் பெருமானே!

❊ ❊ ❊

**ராகம்: சங்கராபரணம்** மெட்டு : **நாத பிந்து கலாதீ**

3. ஆதி அந்தம் இலாத ஐயப்பா
ஆறு தலங்களில் அமர்ந்த ஐயப்பா –
நீதி நெறி காக்கும் நீறணி ஐயப்பா – நிர்மலமான

வேத கீத புராணங்கள் போற்ற
வீரனாய் வந்த சுவாமியே ஐயப்பா
வீதி தோறும் சரணம் முழங்கிட – வினை ஓட

பாதம் பணிபவர் பவபயம் போக்கிடப்
பாவ நாசனாய்ப் பந்தள பாலனாய்
பம்பைக் கரைதனில் வந்துதித்தாய் எங்கள் –
மணிகண்டா

ஆதரம் நீயே என்றுனைப் போற்றியே
ஓதும் சரணங்கள் உன் திருச்செவிதனில்
கீதமாகவே கேட்டதும் விரைந்தே – வருவாயே!

ஈதல் அறத்தினை ஏற்று மகிழ்பவ
எளிய பூசையை ஏந்தும் மனத்தவ
இரக்கம் உள்ளவர் என் அடியார் எனச்–சொன்னாயே

ஏழ்தலம் தொழும் உனக்குநிகர் இந்த
ஈர்ந்தண் உலகினில் எவரும் இலர் என
ஓர்ந்து உன் திரு அடிமலர் என்றும் – தொழுதோமே.

பாதி சிவனுடன் மீதி மாலவன்
பாகம் கொண்டதில் பாலகன் ஆனவ
ஆதி அரிகர புத்ரன் எனப் பெயர் – அமைந்தோனே

வாழ்வில் உனையன்றி வாழ்த்த ஒரு தெய்வம்
வாய்த்த தில்லை என நான் கொண்டேன்
காய்த்த தென்னை சூழ் காவிரி திருச்சியைக்
காவல் கொள வந்த – பெருமானே!

❊ ❊ ❊

ராகம்: **நாதநாமகிரியை**

4. கனக மேனியின் இன்னொளி மேவிட
இலகும் ஓர்நகை சிந்தியுலாவிட
அளக பாரம் அசைந்திட வேல்விழி – மயல்வீச

கவினுலாவிய பெண்மை யெலாம் ஒரு
கவிதையாகி மயங்கிய தோவென
வடிவுமேவி விளங்கிய மோஹினி – மனமார

பனிநிலாவொடு கங்கை குலாவிய
சடையுளான் அரவங்களுலாவரும்
அழகு மேனியின் அன்றொரு தாருக – வன மீது

புனிதரானவர் தம்குல மாதரின்
மனமெலாம் அழியும் படி தேசுறு
வடிவினான் சிவ சங்கர தேவனும் – உறவாட

வனமுலாவிய பம்பையிலே சிறு
மதலையாகி வளர்ந்தவனே கொடு
மஹிஷிமாள சரம்தனை ஏவிய – சபரீசா

வரையிலாது வளர்ந்திடு தீவினை
அதனிலே உழலும்படி மாயையில்
அறிவிலாது மயங்கிடவே எனை – விடுவாயோ

‘எனது, நான்’ எனும் எண்ணமெலாம் அற
இடையறாது மனம்தனிலே பத
சரணமே நிலை நின்றிட நீதிரு – அருள்தாராய்

சபரி மாமலை தங்கிய மோஹன
சடுதியில் வரு துரக வாஹன
ஹரிஹரா, பதினெண்படி மேவிய – பெருமானே!

※ ※ ※

ராகம் : **ரஞ்சனி** மெட்டு : **அகரமும் ஆகி**

5. அகரமும் ஆகி, அரிஹர சுதனாகி
அகில லோக நாயகனாகி,
அயன் அரி அரனும், அமரரும் துதிக்க
அழகிய சபரியில் அமர்ந்தோனே!

இகபர நலன்கள் ஏழைகட்குதவும்
இரும்புலி வாகனா மணிகண்டா
எழிலார் பம்பையின் இருநீர் வருடும்
இணையடி தொழவே அருள்வாயே!

பகை, பிணி, படுதுயர், பாழாம் கவலைகள்
வகையாய்ப் பொடி செய்யும் சிவபாலா
வன்புலியாகிய வாசவன் சுமந்திட
வாபரின் தோழமை வளர்த்தோனே!

செகசெண எனமணி ஒலித்திட வரும் துணை
காளன் துதிசெய்யும் கருணா கரா
செந்நெலும் கதலியும் சேர்ந்திடும் திருச்சியில்
சந்ததம் குடி கொண்ட பெருமானே!

(வாசவன்–இந்திரன்) ❊ ❊ ❊

ராகம் : **பாகேஸ்வரி** மெட்டு : **ஏறுமயில் ஏறி**

6. அச்சங்கோவில் அரசன் எனக்
கொண்ட உரு ஒன்று
ஆரியங் காவில் கொண்ட
மணக்கோலம் ஒன்று

குளத்துப் புழை பாலன் எனக்
கனிந்த உரு ஒன்று
கோடி ஜனம் குவி சபரித்
தவக்கோலம் ஒன்று

எரிமேலி தனில் ஏற்ற
எழிற் கோலம் ஒன்று
ஏர் காந்த மலை சோதி
ஏற்ற ஒளி ஒன்று

ஆறு படை வீடமர்ந்த
ஐயப்ப தேவா
ஆறா கலித் துயரை
அகற்றும் பெருமானே!

❊ ❊ ❊

ராகம் : **அடானா** மெட்டு : **காரண மதாக வந்து**

7. மாதர் ஆசை தனையே மறந்து
மாலை யணிந்தே விரதம் இருந்து
தீதகலச் சரணம் தினம் ஓதி
தீ நெறியில் சேராமல் உய்ந்து

நாத மெய்ப் பொருள் ஆன சாஸ்தாவே – நான்
சோதி தரிசனம் காண அருள்வாயே
சூத மிக வளர் சபரி கிரி மீது
சுத்த சித்துருவான பெருமானே!

❊ ❊ ❊

ராகம் : சக்ரவாகம் மெட்டு : **அபகார நிந்தைபட்டு**

8. அப வாதம் கொள்ளும்தீ நெறிமேவும்
அறியாத மூடரைச் சேராதே
உபதேச மந்திரம் தினம் ஓதி
உனைநான் நினைந்தருள் பெறுவேனோ

இப வாகனன் எனப் புவி போற்றும்
எழில் மேவு பம்பை சேர் அதி தீரா
செபமே செய்வோர்கள் தினம் கூடும்
திருவாழும் சபரியின் பெருமானே!

❊ ❊ ❊

(இபம் – யானை)

## ராகம் : ஹிந்தோளம்

9. மலைராசன் என்னும் மணிகண்ட தேவனே
மாயவ மோகினி மகிழ்சிவ பாலனே
மகிஷி வதம் செய்ய மாத்தவம் ஏற்று
மணி நீர்ப் பம்பையைச் சேர்ந்தோனே!

நிலையில் லாதலை நெஞ்சக் கடலினை
நெய்போல் உருகிட வைப்போனே
பொய்யில் உள்ளமே புவியில் என் ஆலயம்
மெய்யாய் உறைவேன் என்றவனே!

அலைகடல் எனத் தொடர் பிறவிகள் அறுந்திட
மலையிடைக் காட்சி அளித்தவனே
அன்பர்கள் இருமுடி அமைவாய் ஏற்றிட
அழகார் சபரியில் அமர்ந்தோனே!

உலையின் மெழுகென உருகியே உளத்தினில்
உனக்கெனத் தீபம் ஒளிர வைத்தேன்
உய்வகை காட்டி உன் உயர் அடியாருடன்
என்னையும் ஏற்றிடு பெருமானே!

❋ ❋ ❋

ராகம் : **சண்முகப்ரியா** மெட்டு : **காதிமோதி வாதாடி**

10. ஆதி அந்தம் இல்லாத அரனும் அரியோடு
ஆனந்தமாக இணைந்தே தரு தவபுத்ரா
மாதர் ஆசை கடிந்தே சபரிகிரி மீது
மாறிலாத விரதம் கொண்டு அமர்ந்தோனே

நாத கீத வேதாந்த ரூபப் பொருளான
நலமார் தத்வமஸி வாக்கியம் உரைத்தோனே
தீதிலாத மெய்த் தொண்டர் தினம் தேடி
சேவித் தெழுந்து ஜெயம் காணச் செய்யும் பெருமானே!

❊ ❊ ❊

## ராகம் : யமுனா கல்யாணி

11. முன்னம் எத்தனை எத்தனை ஆசைகள்
பின்னும் எத்தனை எத்தனை வேஷங்கள்
நண்ணும் எத்தனை எத்தனை பந்தங்கள்–நலமாக

எண்ணும் எத்தனை எத்தனை இன்பங்கள்
பண்ணும் எத்தனை எத்தனை பாவங்கள்
ஒண்ணும் உலகினில் சதமிலை என்றே–உன்பாதம்

அண்ணித்து எத்தனை எத்தனை மலர்கொடு
அர்ச்சித்து எத்தனை எத்தனை நாளாய்
அழுதே எத்தனை எத்தனை கதறியும் – கேளாயோ

மண்ணில் எத்தனை அத்தனை கவலைகள்
கண்ணில் எத்தனை அத்தனை கருணையால்
எண்ணித் தீயினில் பஞ்சு செய்வாய் எங்கள் பெருமானே!

❊ ❊ ❊

ராகம் : **நாட்டைக்குறிஞ்சி** மெட்டு : **தமரும் அமரு**

12\. உறவும் மனையும் உரிமைப் பெண்டிரும்
உதவும் நண்பரும் அயலாக
தறுகண் மறலி எறியும் கயிற்றில்
தலையும் சரிந்து துவளாமல்

கமல விமல மரகதமணி
கனக மருவும் திருப்பாதம்
கருத அருளி எனது பயத்தைக்
கடிந்துன் காட்சி தர வேண்டும்

குமர சபரி மலையில் யோகக்
கோலம் கொண்ட எழில் நாதா
குலவு பழநி முருகன் தம்பியாய்க்
கொஞ்சிடவே வரும் குருநாதா

அமரர் துதிக்க அந்த மகிஷியும்
அருள் பெற்றுய்யச் செய் சீலா
அழகும் தவமும் அரிய வலியும்
அமைந்த எங்கள் பெருமானே!

❋ ❋ ❋

ராகம் : **ஆனந்த பைரவி**     மெட்டு : **மாலாசை கோபம்**

13\. காமாந்த காரம் ஓயாமல் சூழ
மாயா விகாரம் மனம் சூழ
கோபாக்னி வாட்டக் கொடுமைகள் ஓங்க
பாழான நரகம் சேராமல்

வேதாந்த சார கீதங்கள் பாடி
நாதா உன் கோவில் வர வேண்டும்
மாலோடு நீல கண்டப் பிரானும்
மகிழ்ந்தேத்து சபரிப் பெருமானே!

❊ ❊ ❊

ராகம் : **கல்யாணி** மெட்டு : **தண்டையணி வெண்டையம்**

14. தண்டையணி செம்பதம் கிண்கிணி சதங்கையும்
தண்ணொளிச் சிலம்புடன் கொஞ்சவே
தந்தை அரன் தாய் அரி இன்பமெனும் வாரிதி
தன்னிலே திளைத்துமே அன்பு கூர

கண்டு மகிழ் கண்களும் சுரிகுழல் அலைகளும்
சங்கெனத் திகழும் மணி கண்டத்தோடு
செண்டுகொளும் கையும் திகழ் சின் முத்திரைக்கையும்
சங்கையின்றி காத்திட வந்த தாளும்

வண்டுலாம் மாலைதிகழ் மரகத மணி மார்பும்
மந்தகாசம் திகழ் மலர் வதனமும்
சபரியில் வந்ததொரு சந்த்ரோதயம் என
சந்ததம் கருணை அலை வீசு கண்ணும்

புண்டரிகம் பூத்ததெனப் பொலிகின்ற அழகோடு
எங்கள் கலி தீர்க்கவே இங்கு வந்தாய்
மண்டல விரதம் கொண்டு மாலையணி சாமிமார்
மனக்கோவில் ஏற்று அமர் பெருமானே!

❊ ❊ ❊

ராகம் : **ரேவதி** மெட்டு : **முந்து தமிழ்மாலை கோடி கோடி**

15. பம்பை நதிக்கரை மேவி மேவி
பாலுக் கழுத ஓர் பாலன் நீதானோ?
அம்மை தலைவலி போகப் போக
அரும்புலிப் பால் தந்த வீரன் நீ தானோ?

சங்கடம் கொண்டோர்கள் தேடித் தேடி
சன்னிதி நாடிச் சரணங்கள் பாடிடும்
குஞ்சரம் புலிகள் குறைவிலா துறையும்
குளிர் சபரீசனாம் குருவும் நீ தானோ?

வெஞ்சமரில் மகிஷி வீழ்ந்திடச் செய்த
வீரமணி கண்டனாம் வீரனும் நீ தானோ?
அஞ்சொல் மங்கையர் அழகு மணம் கொள
அய்யனார் சாஸ்தா ஆனவன் நீ தானோ?

குஞ்சர முகன் தம்பி குன்றாடுவான் தம்பி
செஞ்சடையோன் மோகினி சுதனும் நீ தானோ?
பஞ்சு தறிபடும் பாடுபடும் உலகோர்
சஞ்சலம் தீர்த்திடும் பெருமானே!

❊ ❊ ❊

ராகம் : **ஹம்சாநந்தி**

16. சீலமறியாது நூலறிவிலாது
சேவடி தொழாது புவிமீதில்
சேல்விழியர் மீது மோக மிக வாழ்வு
சீரழிய வாடி உழல்வேனே

நீலநிற ஆடை சூடுமடியாரின்
நீழலுற நீயும் நினையாயோ
நீசநிலைபோக வீடுகதி சேர
ஞான உபதேசம் அருள்வாயே

சூலனொடு மாயன் சேர உருவான
பாலக விசால மணிமார்பா
சூழு(ம்) மழைமேகம் ஞாயிறு நிலாவை
மூடு(ம்) மலை மீதில் உறைவோனே

நாலுமறையோரின் வேத ஒலிசூழ
நாதவடிவான சபரீசா
பூதகணநாத யோக குருநாத
ஜோதி மலை மேவும் பெருமானே !

❊ ❊ ❊

ராகம் : **காவடிசிந்து** மெட்டு : **பாதிமதி**

17. மாலும் சிவனுடன் மருவிச் சேர்ந்திட
மதலை வடிவினில் உருவாகி
பாலன் வேண்டிய பந்தள ராசனின்
பாசம் கூடிட வளர்ந்தாயே

கோல எழில் கொண்டு
குருவுக் குதவிய சீலமிகும் திருச்சபரீசா
நீல நிறம் திகழ் கண்டன் அரன் என
ஏலும் சின் முத்திரை கொண்டாயே

பாலும் வேண்டிய அன்னைக்காகவே
கோல வரிப்புலிக் கூட்டமே
ஞாலம் நடுங்கிட நல்லோர் வணங்கிட
நயந்து வரச் செய்த அதிதீரா

வாலை பயிரவி வாழ்த்தும் மகனென
வாபர்துணை என வரும் நேயா
நாளும் கடல் என மேவும் அடியவர்
நலங்கள் கூட்டிடும் பெருமானே!

❋ ❋ ❋

ராகம் : **மத்தியமாவதி** மெட்டு : **துள்ளுமத வேட்கை**

18. துள்ளு மதன் என்னை வெருட்டாமல்
தொல்லை தரும் கோபம் நெருங்காமல்
மெல்லவரு ஆசை அலை மேவி
வீண் சபலம் கொண்டு உழலாதே

கள்ள மனம் துள்ளித் திரியாமல்
கழுத்தில் மணி மாலை அணிவேனே
தெள்ளு தமிழ்ப் பாவால் தினம் நானும்
செய்யும் பூசை ஏற்கும் பெருமானே!

❊ ❊ ❊



**<u>AUDIO CD</u>**

இப்புத்தகத்தில் அடங்கியவை ஓதுவார் அவர்களால் பாடப்பெற்று Audio CD வடிவில் விற்பனைக்கு உள்ளது.